முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.07.04.2025

O.S.No.156 / 2022

வா.சா.1 கணேஷ்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) 2010 முதல் 2022 வரை எனக்கு விலை எழுதித்தந்ததாக சொல்லக்கூடிய காந்திமதி, ஆறுமுகம் மற்றும் முருகன் பெயரில் பட்டிகை சொத்து வரியோ, வீட்டு வரியோ இல்லை என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. நான் பட்டிகை சொத்து சம்பந்தமாக எந்த ஆவணமும் பார்க்காமல் என் மனைவி பெயரில் விலை வாங்கினேன் என்றால் சரியல்ல. நீங்கள் என்னிடம் கேட்ட ஆவணங்களை நான் பார்க்கவில்லை.

சாட்சி குறுக்குவிசாரணையின்பொழுது பிரதிவாதி தரப்பில் விலை வாங்கிய சமயத்தில் என்ன ஆவணத்தை பார்த்து விலை வாங்கியதாக பிரதிவாதி வழக்கறிஞரால் கேட்ட கேள்விக்கு ஆங்கிலத்தில் ஒருமுறை டாக்குமெண்ட் என்றும் அதன் பெயர் என்ன என்று கேட்டால் தமிழில் பத்திரம் என்றும் பதில் தெரிவித்தார். எனவே குறுக்குவிசாரணை இத்துடன் முடிக்கப்படுகிறது.

வா.சா.1 குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.